IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# கிறித்துவக் காப்பியத்தில் அழகியல் சிந்தனைகள்

**முனைவர் து.ஸ்டெல்லா மேரி,**

**உதவிப்பேராசிரியர்,**

**தமிழ்த்துறை சுழற்சி -2**

**தூய தாமஸ் கலை மற்றும் அறிவியல்**

**கல்லூரி,**

**சென்னை**–107.

**ஆய்வுச் சுருக்கம்**

மேலைநாட்டிலிருந்து வாணிபம் செய்ய வந்த கிறித்தவர்களின் வரவினால் எண்ணவியலா மாற்றங்களை அடைந்தது இந்திய நாடு. அதே சமயம் தமிழ் இலக்கியத்திலும் முன்னேற்றங்களையும் மாறுதல்களையும் கிறித்தவர்களால் வழங்கப்பட்டன. அவ்வாறு மதம் பரப்ப வந்த கிறித்தவர்கள் மொழியின் மீது ஈடுபாடு ஏற்பட்டு இலக்கியங்களையும் இலக்கணங்களையும் படைக்கலாயினர். மேலைநாட்டினரும் இந்தியக் கிறித்தவர்களும் கிறித்தவ இலக்கியங்களை எழுதினர். அவ்வாறு கிறித்தவர்கள் படைத்த காப்பியத்தின் மீது ஈடுபாடு கொண்ட தமிழ்க் கிறித்தவரான ஆசுகவி ஆரோக்கியசாமி படைத்த சுடர்மணிக் காப்பியத்தில் இயற்கையைப் பற்றிய கவிஞரது எண்ண ஓட்டங்களும் கருத்தோட்டங்களும் எவ்வகையில் எல்லாம் அழகியல் சிந்தனைகளாக வெளிப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரையில் எடுத்தியம்பட்டுள்ளது

**திறவுச் சொற்கள்:**

அழகியல் ,கிறித்தவக் காப்பியம்,சுடர்மணி, இயற்கை

**முன்னுரை**

கிறித்தவம் இந்திய நிலப்பரப்பில் எண்ணற்ற மேம்பாடுகளை முன்னேற்றங்களை ஏற்படுத்தித் தந்துள்ளது. இந்த இருபத்தோராம் நூற்றாண்டு இயந்திரத்தனமான வாழ்க்கையை நமக்களித்துள்ளது. ஒவ்வொருவரும் ஒவ்வொருவரிடமிருந்து ஏன் ஒவ்வொரு பொருளிடமிருந்தும் அந்நியப்பட்டிருக்கின்றோம். இந்த நவீன வாழ்க்கையை உருவாக்கக் கூடிய முயற்சியில் இலக்கியத்தில் குறிப்பாகக் கலைப்படைப்பின் பங்களிப்பு இன்றியமையாதது. அதில் அழகியலும் ஒன்று. அந்த அழகியல் சிந்தனை கிறித்துவக் காப்பியமான ஆசுகவி எஸ்.ஆரோக்கியசாமி எழுதிய சுடர்மணிக் காப்பியத்தில் ஏற்படுத்திய கவிதை இன்பத்தை விளக்குகிறது இக்கட்டுரை.

**அழகியல் சிந்தனை ஓர் விளக்கம்:**

அழகு என்பது எங்கும் பரந்துபட்டது. அதனால் அது பொருள் வரையறுகளுக்கு உட்படாத ஒரு சொல்லாகும். எனினும், சிலர் அதனை விளக்கியுள்ளார். "புலன்கள் அல்லது மனத்தை இன்புறுத்துவது அழகு" என்கிறார் தாமஸ் அக்கினாஸ். "உண்மையே அழகு" என்கிறார் கீட்சு.மேலும் கலைஞன் தன் படைப்புக்கு ஓர் உருவம் கொடுக்கும் பொருட்டு பல்வேறு கட்டுக்கோப்புகளையும், ஓசை நயங்களையும் நிறபேதங்களையும் அல்லது சொற்றொகுதிகளையும் சேர்க்கும் சேர்மானமே அழகு என்று அழகியலுக்கு இலக்கணம் வடித்திருக்கிறார் கார்க்கி.

கலைக்கும் கவிஞனுக்கும் மிகுதியான மதிப்புக்கொடுப்பதே அழகியல் தான் தமிழில் அழகியலைத் திரு.வி. க முருகன் அல்லது அழகு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். முருகு என்ற சொல் இளமை – அழகு – மனம் – கடவுள் தன்மை என்ற நான்கையும் உணர்த்தும்,இந்த இயற்கைதானே உண்மையான அழகு. அழகியல் என்பதற்கு இவ்வாறு பல்வேறு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அழகியல் என்பது கலைகளைப் பற்றிய ஒரு புரிதலை நமக்குத் தருகின்றது. அறிவை விரிவாக்கி உள்ளத்தை நெகிழ்வித்து இன்பம் என்கிற உணர்வைத் தருகிறது.

**அழகியல் பார்வை:**

இந்தப் பூமியெங்கும் அழகின் சிரிப்பு விரிந்திருக்கின்றது. ஒவ்வொருவரும் அதைக் காணும் பொழுது ஒரே மாதிரியாக இல்லாமல் வேறுபடுகிறார்கள். ஒரே கருத்தை மனம் ஒரு சமயம் சுகமாகவும் , மற்றொரு சமயம் சோகமாகவும் உள்வாங்கிக் கொள்கிறது. ஒருவனுக்குச் சுகமாக இருப்பது மற்றொருவனுக்குச் சோகமாக இருக்கிறது. எனவே, சுகமும் சோகமும் காண்பதில் இல்லை. அவை

மனதோடு சூழ்நிலையோடு தொடர்புடையது . இது மனிதருக்கு மனிதர் வேறுபடக் கூடியது . பதினெண் சித்தர்களுள் ஒருவரான திருமூலர் இந்த வேறுபாட்டினை மிகவும் அழகாகக் குறிப்பிடுவார்.

**மரத்தை மறைத்தது மாமதயானை**

**மரத்தில் மறைந்தது மாமதயானை** (திருமந்திரம்,2017 )

இந்தப் பாடலில் மரத்தால் செய்யப் பட்ட ஒரு யானை பொம்மியைக் கொண்டு வந்து நிறுத்துகிறார். இதைப் பார்ப்பவர் ஒரு மர வியாபாரியாக இருந்தால் அது செய்யப்பட்ட மரம் வேங்கையா, தேக்கா என்ற நோக்கில் அவரது பார்வை இருக்கும். அங்கே யானை என்னும் உருவம் இரண்டாம் இத்தைப் பெறுகிறது. மரம் முதலிடம் பெறுகிறது.

அதனையே ஒரு மரச்சிற்பி பார்க்க நேர்ந்தால் அதில் இருக்கும் யானை உருவத்தையும் அதன் கலை நயத்தையும் பற்றியதாகவே இருக்கும் . இதுவே அவரது முதல் பார்வை அதற்கப்புறம் தான் மரம். இங்கு அழகியல் முதலிடம் . மரம் இரண்டாவது இத்திற்கு த் தள்ளப்படுகிறது. இதைத் தான் அழகியல் பார்வை எண்று குறிப்பிடுகின்றனர்.

இன்னொரு வகையில் இந்த அழகியல் பார்வை தனிமனிதனைச் சார்ந்தும், அவன் பிறந்து வளர்ந்த பண்பாட்டுப் பின்னணியைச் சார்ந்தும் செயல்படுகிறது. மகாபாரதத்தில் வர்ம் ஒரு காட்சி இதனை நமக்குத் தெளிவு படுத்துகின்றது. சுற்றியுள்ள மனிதரில் நல்லவர் யார்? தீயவர் யார்? என்று கண்டறிந்து வருமாறு அனுப்பப் பட்டபோது நல்லவர் யாருமிலர் என்றும் தீயவர் எங்கும் உள்ளனர் என்றும் துரியோதனன் கூறிகிறான். அதற்கு நேர்மாறாகத் தீயவர் யாருமிலர், நல்லவரே உள்ளனர் என்று தருமன் கூறுகிறான்.இங்கு துரியோதனப் பார்வை தருமப்பார்வை என்ற இரண்டில் தர்மப் பார்வையே அழகியல் பார்வையாகும்.

**அழகியல் அனுபவம் என்பது நாம் காணும் கலைப் பண்புகளைப் பொறுத்து இருக்கிறது. அதே நேரத்தில் அழகியல் ரீதியான பார்வை இல்லாதவன் மிக உயர்ந்த கலைப் படைப்பைப் பார்க்க நேர்கிற போது கூட அதிலிருந்து கலை இன்பத்தைப் பிழிந்தெடுக்க முடியாதவனாகி விடுகிறான். இருநிலைகளையும் தொட்டுச் செல்கிறது இந்த அழகியல் பார்வை.** (க.இராமச்சந்திரன்,2006)

**இயற்கை அழகியல்:**

மனித வாழ்க்கையை அந்நியமாக்காமல் இணைக்கிற பாலமாகவும் இருப்பது இயற்கை. இயற்கை ஒரு திறந்த புத்தகம்.மனித வாழ்வை அழகியல் அணுகுமுறையில் அணுகுவதற்கும் துணிந்து நிற்பது, அழகுகள் அனைத்தும் உண்மையாக இருப்பதில்லை.ஆனால் உண்மைகள் எப்போதும் என்றும்

அழகாகவே இருக்கின்றன.அதனால் தான் கவிதை உண்மைகளைத் தனது உள்ளத்திலும் உதட்டிலும் உட்கார வைத்திருக்கிறது இயற்கையும் உண்மைதான்.

**சூரியனின் செயல்:**

பாட்டுக்கொரு புலவன் பாரதி ஆகாவென்று எழுந்தது பார் சுடர்ப்பரிதி என்றார். பாரதி சொன்ன சொற்கோலங்களை புதுக்கவிதையில் நடவு செய்தவர்கள் பலர் ஆரோக்கிய சாமி எழுதிய சுடர்மணிக் காப்பியத்தில்

**பகலவன் நாளும் வந்து**
**பணிந்துபின் மேற்கே செல்வன்**
**உகந்திடு மதியும் அல்லில்**
**உறவோடு தோன்றி மீள்வன**
**மிகுந்திடும் வெயிலில் மேகம்**
**மேனின்று நிழலை ஈவன்**
**சுகமதை அருளக் காற்றும்**
**சுழன்றேங்கும் சூழ்ந்து நிற்பன்**

**(ஆரோக்கிய சாமி ,1987)**

என்று பாடியுள்ளார்.

தினந்தோறும் சூரியன் தோன்றுவதைக் கவிஞர் தமது கற்பனையை ஏற்றிக்கூறும் விதமாக சூரியன் நாள்தோறும் காலை ஆனதும் வருவதும் மாலை ஆனதும் மேற்கே மறைவதையும் , மத்தியானத்தில் உச்சிக்கே சென்று வெயிலின் தாக்கத்தைத் தருவதையும் குறிப்பிடுகிறார். மேலும் , மேகம் மேலே இருந்தபடி நிழலைத் தருவதையும், குளிர்ச்சியான தென்றலைத் தரவே காற்று எல்லாத் திசைகளையும் அளந்தபடியே சுழன்று வருகிறது என தனது கற்பனை ஆற்றலை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

**ஒளி –மின்னல்**

**கவிதை என்பது மேசை மீதுள்ள இயற்கைக் காட்சி ,இயற்கைக் காட்சி என்பது பூமியின் மீதுள்ள கவிதை** (வைரமுத்து இலக்கியத்தடம்,2004) என்பார் ச்சங் ச்சௌஙங். ஒளியென்பது இருளை விரட்டும் இயற்கையின் படைப்பு. இங்கு இயற்கையோடு இயைந்த வாழ்வை பதிவு செய்யும் கவிஞர் ஆரோக்கியசாமி. தேவகுமாரன் பேசுவதாகக் கீழ்க்காணும் கவிதையில்

**ஒளியிங்கு உள்ள போதேநீர்**

**ஒளியில் இணைந்தே உறுதியுடன்**

**ஒளியின் மக்கள் என வாழ**

**உறுதிகொள்வீர்; பின்னிருளில்**

**ஒளிநடந்தால் வழிதெரியீர்**

**ஒளியோ மீண்டும் வாராதே**

**ஒளியிங்கு உண்டாம் இவ்வேளாய்**

**ஒளியில் உறுதிப்படுங்களெ ன்றார்**

(ஆரோக்கியசாமி, 1987)

என்று பாடியுள்ளார். **கலை என்பது இயற்கை ,வாழ்க்கை இரண்டின் மொழிபெயர்ப்பு (வைரமுத்து இலக்கியத்தடம்,2004)** என்ற கூற்றிற்கிணங்க ஒளியை இறைவன் குறியீடாகப் பாடியுள்ளதைக் காணமுடிகிறது. இயற்கை எல்லையற்று நிற்கிறது .அதே நேரத்தில் இயற்கையின் ஒரு பார்வையாளராகவும் தன்னைப் பிரித்துப் பார்க்கிற மனிதனை இயற்கை தனது ஒரு பகுதியாகவும் சேர்த்தணைத்துக் கொள்கிறது.எனவே இயற்கை குறித்துக் கவிபுனையும் கவிஞனின் முன்னால் இரண்டு நிலைப்பாடுகள். ஒன்று இயற்கையைப் வெளியில் இருந்து பார்ப்பது. இன்னொன்று இயற்கையை உள்ளே இருந்து பார்ப்பது. இந்த இரண்டு நிலைப்பாடுகளையும் கையாள்கிறார் கவிஞர்.

**நிழல்**

நிஜங்களின் போலி வடிவம் நிழல்கள். இங்கு இயற்கையின் கொடையாகப் பார்க்கப்படுகிறது. நிழல்களுக்கு உயிர் இல்லை. ஆனால் உயிரைத்தரும் ஆற்றல் இருக்கிறதை கவிஞர் கீழ்க்காணும் பாடலில் பாடியுள்ளார்.

**இவர்க்கு நன் நினிழலை ஈய**

**எண்ணிடு மரங்கள் எல்லாம்**

**இவரோடு செல்லும் பேறிங்கு**

**இல்லையே என்று சோரும்**

**அவரவர் தலையின் மீதங்(கு)**

**ஆயர்வின்றிப் பறந்து செல்லும்**

**தவறிலாப் பறவைக் கூட்டந்**

**தம்நிழல் சிறிதென் றேங்கும்**

**(அரோக்கியசாமி,1987)**

**இயற்கையைப் பாடாத கவிஞன் இல்லை, இயற்கையைப் பாடாதவன் கவிஞனே இல்லை** (இரா.சம்பத் ,2006) என்று சொல்லுமளவிற்கு தனிப்பாடல்கள், தொடர்நிலைச்செய்யுள்கள் ஆகியவற்றில் இயற்கை பலவாறு வருணனைப்பெற்றுள்ளது. ஆனால் இயற்கையின் எழிலை நிலையைப் பாடுவதையே முடிவாகக் கொண்ட கவிதைகள் இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்தன. அந்த வகையில் கவிஞர் ஆரோக்கியசாமி இயற்கையின் ஒரு அங்கமான நிழலை மிகச்சிறப்பாக கூறுமிடத்து நிழலைத் தருகின்ற இயேசு பெருமகனோடுசெல்ல முடியாமல் போகிறதே என வருந்துவதாகப் பாடியுள்ளார். இயற்கை சார்ந்த நிகழ்வுகளை கவிதைகளில் படைத்து காப்பியத்திற்கு சிறப்பு சேர்த்துள்ளதைப் பார்க்க முடிகிறது.

**மரம்**

**இயற்கையின் தொட்டில்கள் மரங்கள் மானுட இனம்,உயிரினம் அனைத்திற்கும் சமத்துவக் காற்றை உற்பத்தி சரிசெய்து அனுப்புகிறது. (மு.அருணாசலம்,2011)**இயேசு பெருமானைச் சிலுவையில் அறைந்த கொடூரமான காட்சியைக் கவிஞர் தமது கற்பனையில்

**மரமெலாம் கனியைக்கொண்டு**
**மாநிலம் எல்லாம் விற்ற**
**தரத்தினை விட்டுத் தங்கித்**
**தன்னிடம் வருக என்றே**
**மரத்தின்மேல் நின்ற சேசின்**
**மட்டற்ற நிலைக்கே ஏங்கி**
**கரமெனும் கிளியவிரித்துக்**
**கலங்கிட நேர்ந்தது அல்லோ**

(ஆரோக்கிய சாமி 1987)

என்று பாடியுள்ள பாடலில் குற்றச்செயல்களில் ஈடுபடும் ஒருவருக்குக் கொடுக்கப்படும் தண்டனையான சிலுவையில் அறைதலைக் கொடுத்தனர். இயேசு பெருமானுக்கு அத்தகைய நிகழ்வை கவிஞர் இயற்கையான மரம் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிறது. அங்கங்கு கனியைக் கொடுக்கிறது என்றும், அப்படிக்கொடுத்த மரம் தன்னிலையை மாற்றி எல்லோரும் கனியைப்பெற தன்னிடம் வரவேண்டுமென்று கிளைபரப்பி ஓரிடத்தில் நின்ற மரமாக நின்றதுதான் சிலுவை மரத்தில் அறையப்பட்ட இயேசு என்று கவிஞர் ஆரோக்கியசாமியின் கற்பனை வியப்பை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

**மலர்:**

**ஒரு சந்ததி போகிறது. மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது (பைபிள்** 2015)என்னும் விவிலிய வாசகம் சுற்றுச்சூழல் சீர் கேட்டினால் அர்த்தம் இழந்து போய் நிற்கின்றது என்பதைப் பற்றி

**சிறுசிறு செடிகள் எல்லாம்**
**சிறந்த தம் வாசம் உள்ள**
**சிறுமலர் தம்மைத் தேனும்**
**சிந்திடும் நிலையில் அள்ளிச்**
**சிறுகரங் கொண்டு விற்ற**
**சிறப்பினை விடுத்தே ஓட**
**மறுத்ததால் வருந்தும் நம்மை**
**மகிழ்விப்பார் உண்டோ இங்கே?**

**(ஆரோக்கியம்,**1987)

என்று பாடியுள்ளார். சின்னச் சின்ன மலர்கள் எல்லாம் தம்மிடம் காணப்படும் வாசத்தை வைத்து வண்டுகளைத் தன் வசம் ஈர்த்து தேனினைச் சுவைக்க வைக்கும் ஆற்றலுடைய மலர்களில் இருக்கும் தேனை சிறுகரம் கொண்டு எல்லாத்திசைக்கும் எடுத்துச் செல்கிறது. மலர்கள் மீது அமர்ந்து இருக்கிற போது அதன் சிறு கரத்தில் ஒட்டிக்கொண்ட தேனினை எல்லாப் பக்கமும் எடுத்துக்கொண்டு செல்கிறது. அதனால் மலர்களும் மகிழ்கிறன. ஆனால் அப்படி தேனினைச் சுவைத்த பின் அதனை எடுத்து பிற பகுதிகளுக்கு எடுத்துக்கொண்டு செல்வதில் தயக்கம் காட்டுறவர்கள் வருந்துகிறார்கள் அப்படி வருந்துகிற மக்களுக்கு யாருமிங்கே உதவி செய்ய ஆளில்லை என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.

**புறா:**

**மணிப்புறா விற்போர் ஓட**
**மற்றதன் இறகு உதிர்ந்தாங்கு**
**அணியெனப் புல்லோர் போல**
**அங்கங்கே கிடக்கப் பஞ்சாம்**
**வெண்ணிற இறகு மட்டும்**
**விண்ணிலே பறந்து நல்லோர்**
**விண்ணினை அடைவார் என்று**
**விளக்கமேல் சென்ற தம்மா**

(ஆரோக்கிய சாமி1987)

இயற்கையின் கொடையான பறவைகளைக் குறித்து கவிஞர் பாடிய பாடலில் வெள்ளை நிறத்துப் புறாவின் இறகுகள் உதிர்ந்து காற்றிலாடி மேல்நோக்கிப் பறந்து செல்வது மண்ணில் நல்லவண்ணம் வாழ்கிறவர்கள் விண்ணினை அடைவார்கள் என்று கூற வரும் கவிஞர் இயற்கையின் அழகைக் கண்டு ரசித்துப் பாடியுள்ளதைக் கவனிக்க முடிகிறது.இதனையே திருவள்ளுவர்

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையுந்**

**தெய்வத்துள் வைக்கப் படும்.(குறள்** 50)

என்று பாடியுள்ளார். மேலே சொன்ன கருத்தோடு ஒத்திருப்பதைக் காணமுடிகிறது. **கவிஞன் கவிதையைக் கவிதை என்பதாகப் புரிந்துகொள்ளுவதிலிருந்து தொடங்குகிறது. அதனை வாசகன் புரிந்து கொள்வதில் அல்லது எதிர்கொள்வதில் அது முடிகிறது. இந்த இரண்டில் எந்தமுனை கெட்டாலும் இழப்பு கவிதைக்குத்தான் எங்கிற தி.சு.நடராசனின் கருத்து கவிஞரின் கருத்துக்கு வலுவூட்டுகிறது** (தி.சு.நடராசன் 2008)

**முடிவுரை:**

கவிஞரின் படைப்பில் இயற்கை மண்ணின் நினைவுகளும் நேசங்களும் மொழியின் சுவாசத்தில் கலந்து கிடக்கின்றன. இயற்கையை நேசிப்பவராகவும் இயற்கையை ஆராதிப்பவராகவும் தன்னை அடையாளப்படுத்துகிறார். இயற்கையின் அழகை எடுத்துக்காட்டி அழகைக் கொண்டாடும் சங்க இலக்கிய மரபின் தொடர்ச்சியை வழியுறுத்துவதாக அமைந்துள்ளது. மேலும் சூரியன் , நிலா, மரம், பறவை, விலங்கு, மேகம் என இயற்கையைத் தன் பாடுபொருளாக அமைத்திருப்பதின் மூலம் இயற்கை கவிஞர் என்று அழைக்கத்தக்க வகையில் சுடர்மணிக் காப்பியத்தின் அறிய முடிகிறது.

**பார்வை நூல்கள்:**


1. திருமூலர்(2017),திருமந்திரம், பாரி நிலையம்,சென்னை
2. க.இராமச்சந்திரன்,(2006) புதுக்கவிதைகளில் பன்முகப்பார்வை,நியூ செஞ்சுரிப் புக் ஹவுஸ்(பி)லிட், அம்பத்தூர். சென்னை–98
3. எஸ்.ஆரோக்கிய சாமி(1987), சுடர்மணிக் காப்பியம்,கமலா பதிப்பகம், வாத்துக்காரத்தெரு, உறையூர், திருச்சிராப்பள்ளி.
4. காவ்யா சண்முக சுந்தரம்(தொ.ஆ)(2004),வைரமுத்து, இலக்கியத் தடம், காவ்யா பதிப்பகம், டிரஸ்ட்புரம்,கோடம்பாக்கம்,சென்னை.
5. எஸ்.ஆரோக்கிய சாமி(1987), சுடர்மணிக் காப்பியம்,கமலா பதிப்பகம், வாத்துக்காரத்தெரு, உறையூர், திருச்சிராப்பள்ளி.
6. காவ்யா சண்முக சுந்தரம்(தொ.ஆ)(2004),வைரமுத்து, இலக்கியத் தடம், காவ்யா பதிப்பகம், டிரஸ்ட்புரம்,கோடம்பாக்கம்,சென்னை.
7. எஸ்.ஆரோக்கிய சாமி(1987), சுடர்மணிக் காப்பியம்,கமலா பதிப்பகம், வாத்துக்காரத்தெரு, உறையூர், திருச்சிராப்பள்ளி.
8. இரா.சம்பத்(2006), இலக்கியமும் இலக்கியக்கோட்பாடும்,உமாபதிப்பகம்,காமராசர் சாலை,பிள்ளைத்தோட்டம்,புதுச்சேரி
9. மு.அருணாச்சலம்(2011), தமிழ்ப்புதுகவிதைகளின் நோக்கும் போக்கும், அருண்பதிப்பகம், கொம்பேரிப்பட்டி, அய்யலூர் (வழி),திண்டுக்கல்.
10. எஸ்.ஆரோக்கிய சாமி(1987), சுடர்மணிக் காப்பியம்,கமலா பதிப்பகம், வாத்துக்காரத்தெரு, உறையூர், திருச்சிராப்பள்ளி.
11. பைபிள்(2015), பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா, பெங்களூர்
12. எஸ்.ஆரோக்கிய சாமி(1987), சுடர்மணிக் காப்பியம்,கமலா பதிப்பகம், வாத்துக்காரத்தெரு, உறையூர், திருச்சிராப்பள்ளி.
13. மு.வரதராசன்(2014),திருக்குறள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், டி.டி.சாலை, சென்னை.
14. தி.சு.நடராசன்(2008), நியூ செஞ்சுரிப் புக் ஹவுஸ்(பி)லிட், அம்பத்தூர். சென்னை–98